1978 பிப்ரவரி 28]

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லும்போது மாநில அரசுக்குப் பெயர் வைக்கின்ற அதிகாரம் இல்லையென்று சொன்னார்கள். இதை வைத்தாவது புதிய அரசு மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே இந்தக் கழகத்தின் அமைப்பே டெல்லியில் தலைமைப் பீடம். இங்கே இருப்பது அதனுடைய கிளைகள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே இ.எஸ்.ஐ. திட்டத்திலே மாநில சர்க்காருடைய பங்கு என்ன? மத்திய அரசும் பங்கு போடுகிறது—மாநில சர்க்காருடைய பங்கு என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*311 வினா— திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இ.எஸ்.ஐ. மருத்துவமனைகளில் மருந்து கொள்முதல் செய்வதை பரவலாக்குவது என்ற முறையை அரசு அமுலாக்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதனால் ஏற்பட்டுள்ள நன்மைகள் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[முற்பகல் 9–40.]

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் சப்ளையாகின்ற மருந்துகள் யாவும் ஒரு மையத்திலிருந்து விநியோகிக்கப்படுகிறதா ? அல்லது அந்த மருத்துவமனைகள் இல்லாத பெரிய டிஸ்பென்சரிகள் உட்பட்ட பெரிய Net work of organisations இருப்பதால் இதற்குப் பல இடங்களில் பரவலாக வழங்குவதனால் பலன் இல்லையா, எது சிறந்தது என்பதற்கான விடையை எதிர் பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே டெல்லியில் உள்ள குழுவால் நிர்ணயிக்கப் படுகிற மருந்துகள். விலைக்கேற்ப அங்கே உள்ள அதிகாரி வாங்கி சென்னையில் உள்ள இரண்டு மருத்துவமனைகள், கோவை, மதுரை யில் உள்ள மருத்துவமனைகளில் ஸ்டாக் செய்துவிட்டு அங்கிருந்து மருந்தகங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. எந்தக் கம்பெனியில் வாங்க வேண்டும் என்றும் டெல்லியில் உள்ள குழு நிர்ணயிக் கிறது. அவர்கள் குறிப்பிட்ட காலத்தில் அனுப்பவில்லை என்றால் அந்தந்த ஸ்டாக் செய்யக்கூடிய மருத்துவமனையில் உள்ள அதிகாரிகளுக்கு வாங்குவதற்கு அதிகாரம் இருக்கிறது. அங்கே இருந்தும் குறிப்பிட்ட மருந்துகள் கிடைக்கவில்லை என்றால், மருந்தகங்களிலேயே வாங்கி உடனடியாக தொழிலாளர்களுக்குக் கொடுக்க, 200 ரூபாய் டெப்பாசிட், இம்பிரஸ்ட் கேஷ் இருக் கிறது. அப்படி அவர்களும் வாங்க வசதி இல்லை என்றால், தொழிலாளர்களே வாங்கிக் கொண்டால் அதை அவர்கள் 'ரீ இம் பர்ஸ்' செய்யும் வசதி இருக்கிறது. அரசாங்கம் அந்தப் பணத் தைத் திருப்பிக் கொடுத்து விடுகிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, விலை உயர்ந்த மருந்துகள் பல அரசாங்க இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் கிடைக் காமல் டாக்டர்கள் சீட்டு எழுதிக் கொடுத்து வெளியில் இருந்து வாங்கி கொடுங்கள் என்று சொல்வதினால், நோயாளிகள் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாக வேண்டியிருக்கிறது. இது சம்பந்தமாக என்ன நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்கப் போகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, விலை உயர்ந்த மருந்துகள் கிடைக்கவில்லை என்று, எனக்கு இரண்டு இடங்களில் இருந்து புகார் வந்தது. உடனடி யாக அந்த மருத்துவமனைகளுக்கு நேரே சென்று Substitute medicine கொடுக்காமல் Special medicine தான் கொடுக்க வேண் டும் என்று உத்திரவிட்டிருக்கிறேன். கோவையைப் பொறுத்த வரையில் நானும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் சென்றி ருந்த பொழுது, அப்படிப்பட்ட குறையை யாரும் சொல்லவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

திரு. ஏ. ரகுமான்கான் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அரசாங்கத்தின் மருத்துவ மனைகளில் மருந்துகள் திருட்டுப் போகிறது என்ற குற்றச்சாட்டை வெளியில் பகிரங்கமாக சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருந் தால் தொழிலாளர் நல அமைச்சரிடம் தெரிந்து கொள்ள விரும்பு கிறேன். அப்படி ஏதாவது மருந்துகள் திருட்டுப்போனது என்ற புகார் வந்ததா ? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? அதி காரிகள் விசாரிக்கப்பட்டார்களா என்ற விவரத்தைத் தெரி வித்தால் சரியாக இருக்கும் ?

1978 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி, மருந்து கொள்முதல் செய்வது பற்றி; திருட்டுப் போவதைப் பற்றி அல்ல.

''தாசபளஞ்சிகா'' வகுப்பினர்.

*312 வினு—திரு. சொ. ந. பழனிசாமி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தாசபளஞ்சிகா சாதியைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பொதுமக்கள் கொடுத்த கோரிக்கையின் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்திரபாண்டியன் : கோவையில் உள்ள தாசபளஞ்சிகா மகாஜன சங்கம் 1975ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 9-ம் நாள் தேதியிட்ட கோரிக்கை மனுவில் தாசபளஞ்சிகா சமூகம் தமிழ் நாட்டில் 4,350 பேர் அடங்கிய சிறுபான்மை சமூகம் என்றும் கோவை, நீலகிரி மாவட்டங்களில் வசிக்கிறார்கள் என்றும் கூறி, அச் சமூகத்தை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்குமாறு கேட்டுக்கொண்டது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சொ. ந. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, கன்னடியர் என்ற வகுப்பினர் பிற்பட்டோர் வகுப்பினர் என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அந்த வகுப்பில் முக்கியமான உட்பிரிவு இந்த தாசபளஞ்சிகா வகுப்பினர். அவர்களை இந்தக் பட்டியலில் சேர்த்திருக்கிறார்களா என்று அறியவிரும்புகிறேன். கல்வி, தொழில் மற்றும் அனைத்துச் சலுகைகளை கன்னடியர்களுக்கு வழங்குவதைப் போல இந்த தாசபளஞ்சிகா வகுப்பினருக்கும் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த சலுகை அளிப்பதைப்பற்றி நிலைமை என்ன என்று அறிவதற்காக மாவட்ட அளவிலே உள்ள அந்த சமுதாயத்தின் அதிகாரிகளுடைய கருத்தை அரசாங்கம் கேட்டது. அவர்கள் முதல் அறிக்கையிலே ஒரு கருத்தும், மீண்டும் கேட்டபோது வேறொரு கருத்தும் தெரிவித்த காரணத்தாலே எந்தக் கருத்தினை ஏற்றுக் கொள்வது என்று அரசு பரிசீலனை செய்கிறது. ஆகவே, கீழ்மட்டத்தில் இருந்து வருகிற தகவல்களில் குழப்பம் இருப்பதாலும், இந்தச் சமுதாயம் எந்த நிலையில் இருந்து வருகிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவும் மீண்டும் அரசாங்கம் பரிசீலனை செய்து அறிக்கை பெற்று பரிசீலனைசெய்ய இருக்கிறது.